(ஊ) திருவாரூர் மாவட்ட மைய நூலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்ட மைய நூலகத்திற்கு 2003 ஆம் ஆண்டு 37,200 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் கட்டடமும் கட்டப்பட்டு, நூலகம் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் கூடுதல் கட்டடம் வேண்டுமென அங்கேயிருந்து கோரிக்கை அனுப்பப்பட்டு,* estimate*-ம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 17,000 சதுர அடி இடத்தை மாவட்ட நிர்வாகம் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல், திரும்ப எடுத்துக்கொள்வதற்கு ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறது. இந்த ஆணையை இரத்து செய்ய வேண்டும். அந்த இடத்தில் உடனடியாகக் கூடுதல் நூலகக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

(எ) நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் தொகுதி, நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதியில் ஏற்பட்டிருக்கக்கூடிய குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பொறுத்தவரையில், இங்கிருந்து அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்யப்பட்டது. அங்கு, ஏற்கெனவே வருகிற தண்ணீர் குறைந்துவிட்ட காரணத்தால், தற்போது*

2023 ஏப்ரல் 21] *[திரு. கே.என். நேரு]*

மோட்டார் பம்ப் மூலமாக இறைத்துக் கொடுக்கிற வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாநகராட்சி முழுவதும் தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் கொடுப்பதற்கு புதிய திட்டம் ஒன்று AMRUT *திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 296.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டம் எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கவிருக்கின்றன. எனவே, இந்த வெயில் காலத்தினைச் சமாளித்திடும் வகையில், மோட்டார்மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஏ) கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்கள், மின் வேலியால் யானைகள் உயிரிழப்பதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில், யானை வழித்தடங்களில் மின் வேலிகள் அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், அவ்வழித்தடங்களில் செல்லக்கூடிய யானைகள் மின்வேலியில் மின்சாரம் தாக்கி அடிபட்டு இறந்துவிடுகின்றன. அதோடுமட்டுமல்ல, அந்த இரண்டு மாவட்டங்களில் தொடர்ச்சியாக மர்மமான முறையிலும் பல யானைகள் இறந்திருக்கின்றன. இனி, அவ்வாறு யானைகள் இறக்காமல் அவற்றைக் காப்பாற்றுகின்ற வகையில், நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

(ஊ) திருவாரூர் மாவட்ட மைய நூலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்களின் கோரிக்கைக்கு பதில் சொல்லவிருக்கிறார்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரையுடன் இந்தக் கூட்டத் தொடர் நிறைவடையவிருக்கின்ற இந்த வேளையில், நன்றியைச் சொல்லி என்னுடைய பதிலைக் கூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.*